முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1513

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.11.2023,** திங்கட்கிழமை

1. பிரணவ சக்திமிகு அரங்கனே
பிரணவக் குடில் படைத்த தேசிகனே
சரவணச் சுடரேற்றி சகலருக்கும்
சற்குருவாய் ஞானம் அருளுகின்ற குருராஜனே
2. அரசனே அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 04 ம் நாள், 20.11.2023, திங்கட்கிழமை)
வரமென அரங்கன் நீ தருகின்ற
வல்லமையான தீட்சைதான் உலகோர்க்கு
3. உலகோருக்கு நெறிபிறழாத உயர் வாழ்வுக்கு
உத்தமமான வழிகாட்டலாகும்
ஆகவே அரங்கனைக் கண்டு அகிலத்தார் பெறும் தீட்சை எல்லாம்
ஆற்றல் கூட்டும் அழியாமை தரும்
4. வரமாக அரங்கன் சொல் செயல் அத்தனையும்
வையகத்தை வழிநடத்தும் சக்தியாக இருக்க
ஆகவே உலகோர் ஓங்காரக்குடில் நோக்கி
அரங்கன் தொடர்பு கூட்டி மகானே என
5. முழு சரணாகதி கொண்டு
மண்ணுலகில் தர்மத்தை கையில் எடுத்தால் போதும்
போதுமப்பா அரங்கன் தர்மம்
புண்ணிய உலகமாக மாற்றி
6. இனிதே வரும் காலம்
இயற்கை வளமோடு வல்லமையான ஆளுமையோடு
முருகப்பெருமான் யான் வெளிப்பட
முழுமையான ஞான ஆட்சிக்காலமாக மாற்றம் காணும்

7. காணுகின்ற அற்புதத்தை கலியில்
கந்தவேலன் யான் தவசி அரங்கனைகொண்டு நடத்த இருக்க
ஞானவான்களாக அரங்கனோடு இணைந்தால் போதும்
ஞான ஆட்சி தானாக மலரக்கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–